ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# நந்தன் கதையும் சாதிய அடக்குமுறையும்

முனைவர் செ.அன்புராணி

உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,

பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை - 625 018.

anbusebasvenba@gmail.com

55

**ஆய்வுச் சுருக்கம்**

தொன்மங்கள் உண்மைச் சம்பவங்களையும் வரலாற்று நிகழ்ச்சிகளையும் அடிப்படையாகக் கொண்டவை. தொன்மங்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு நபர்களால் பல்வேறு வடிவங்களைப் பெறுகின்றன. அந்த வகையில் 'நந்தன்' குறித்த தொன்மம் இந்திரா பார்த்தசாரதி எழுதிய 'நந்தன் கதை' நாடகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமையை இக்கட்டுரை ஆராய்கிறது. சமூகச் சீர்கேடுகளையும், சாதிய ஏற்றத்தாழ்வுகளையும், மனித பலவீனங்களையும், வாழ்க்கை அவலங்களையும், ஆதிக்க அரசியலையும் நந்தன் கதை முன்வைக்கிறது. நந்தனார் நெருப்பில் இறங்கி சிவபதம் அடைந்தார் என்னும் பழங்கதையைத் தகர்த்து நந்தனாரை மேல்சாதியினர் எரித்துக் கொன்றனர் என்னும் உண்மையை உரக்கச் சொல்கிறது.

**திறவுச் சொற்கள்**

இந்திரா பார்த்தசாரதி - சாகித்திய அகாதெமி விருதாளர் - தி.ஜானகிராமனின் மாணவர் - மனைவியின் பெயரில் எழுதி வருபவர் - ஆசிரியர் - நாவல் - நாடகம் எழுதியுள்ளார் - 'நந்தன் கதை' நாடகம் - அரசியல் ஆதிக்கம் - சாதிய அடக்குமுறை - சாதிய மேலாதிக்கம்.

**முன்னுரை**

நாடகக் கலை விழிப்புணர்வுக்கலை. சமூகப் பிரச்சினைகளை எடுத்தியம்பி அதற்கான தீர்வுகளை முன்வைக்கும் கலை. நாடக இலக்கியங்கள் வாழ்க்கையைப் பிரதிபலிப்பவை. தமிழ் இலக்கியங்களில் பல்வேறு கதைக்குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. அவற்றில் இடம்பெறும் கதைகள் பல்வேறு மாற்றங்களுடன் வெவ்வேறு வடிவங்களில் இன்று வரை பயன்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் நந்தன் கதையும் பலரால் பல வடிவங்களில் மீண்டும் மீண்டும் எடுத்தாளப்படுவது கவனத்திற்குரியது.

**நந்தன் - தொன்மக் குறியீடு :**

'தொன்மம்' என்பது 'பழமை' என்று பொருள்படும். இலக்கியங்களில் பழமையான கருத்துக்களை எடுத்தாள்வது 'தொன்மம்' என்று கூறப்படுகிறது. "தொன்மைதானே உரையொடு புணர்ந்த பழைமைமேற்றே" (நூற்.229) என்கிறார் தொல்காப்பியர். தொன்மங்கள் உண்மைச் சம்பவங்களை, வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டவை. காலப்போக்கில் படைப்பாளரின் பார்வைக்கு ஏற்ப மாற்றங்களுக்கு உட்படுபவை. தொன்மங்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு நபர்களால் பல்வேறு வடிவங்களைப் பெறுகின்றன. அந்த வகையில் 'நந்தன்' குறித்த தொன்மம் இந்திரா பார்த்தசாரதி எழுதிய 'நந்தன் கதை' நாடகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமையை இக்கட்டுரை ஆராய்கிறது.

எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் 'செம்மையே

திருநாளைப் போவார்க்கும் அடியேன்’ என்று நந்தன் கதையைக் குறிப்பிட்டுள்ளார். பத்தாம் நூற்றாண்டில் நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியில் திருநாளைப் போவான் கதையைக் குறிப்பிட்டுள்ளார். 12ஆம் நூற்றாண்டில் சேக்கிழாரும் நந்தன் கதையைப் பதிவு செய்துள்ளார். திருநாளைப் போவாரின் இயற்பெயர் ‘நந்தன்’ என்பதை முதலில் பதிவு செய்தவர் சேக்கிழார். இதன் தொடர்ச்சியாகக் கோபால கிருஷ்ண பாரதியார் ‘நந்தனார் சரித்திரக் கீர்த்தனை’யை எழுதினார்.

பெரியபுராணம் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்த நந்தனின் கதையைப் பதிவு செய்துள்ளது. சாதியில் தாழ்ந்தவனான நந்தன் பார்ப்பன வேதியன் ஒருவரிடம் வேலை செய்து, தன் குலத்திற்கான சிறுதெய்வ வழிபாட்டை விடுத்து வேதியர்களைப் போல பெருந்தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவதையும், தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்தவன் என்பதை மறந்து, அந்தணனாக மாறி, யாகத்தில் இறங்கி முக்தி அடைந்தமையையும் சேக்கிழார் பதிவு செயதுள்ளார். திருநாளைப்போவார் - நந்தன் என்னும் குறியீடாகப் பெரியபுராணத்தில் காட்டப்பட்டுள்ளார். தாழ்த்தப்பட்ட சாதியில் பிறந்து வேதியனின் பேச்சைக் கேட்டு வேள்வியில் குதித்துச் சாதித் தீட்டு ஒழிந்தவராகக் கற்பிக்கப்படும் கதை சேக்கிழாரால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

“நாடகப் பிரதிகளில் கடவுளர்கள் கதாநாயகர்களாகயிருந்தனர். அரசர்கள் கதாப்பாத்திரங்களாயிருந்தனர். மனிதர்களோ புறநிலையில் தங்காள் பார்த்த எலும்பும் சதையுமான மனிதர்களாக மட்டுமே இருந்தனர். இதற்கு எதிராகக் கடவுளர்கள் மீதும், மதங்களின் மீதும், நம்பிக்கை இழந்திருக்கின்ற சமூகத்தில் தனக்கான முகங்களை இழந்து தனக்கான குறியீட்டு அடையாளத்தைத் தேடும் முயற்சியில் தோய்ந்து போயிருக்கிற அகமன உளைச்சல்களில் சிதைந்து அனைத்தையும் சிதைத்துச் சிதைத்தே பார்த்துப் பழகியிருக்கிற தங்கள் படைப்புக்களின் மூலம் தங்கள் இருப்புகளை நியாயப்படுத்துகிற எழுத்துக்கள் நவீன எழுத்துக்களாகும். இதற்கான வெளிப்பாடுகளாகப் படிமங்களும் குறியீடுகளும் அமைந்தன.” (தமிழில் சோதனை நாடகங்கள், முன்னுரை) என்கிறார் மு.இராமசுவாமி. அந்த வகையில் இந்திரா பார்த்தசாரதியின் ‘நந்தன்’ நெருப்பில் எரிந்துபோவதாகக் காட்டப்பட்டாலும் அந்த நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான உணர்வுப்பூர்வமான குறியீடாக இருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் உரிமைகளை இழந்து நிற்காது, உரிமைக்காகக் குரல் கொடுக்கும் மக்களாக மாற அறைகூவல் விடுக்கிறது.

**சாதிய ஏற்றத்தாழ்வு**

சாதிய அடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிப்பதும், தாழ்த்தப்பட்ட அடித்தட்டு மக்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுவதும் பன்னெடுங்காலமாக இருந்து வருகிறது. இம்முரண்பாடுளே படைப்பிலக்கியங்கள் தோன்றுவதற்கான அடிப்படையாக அமைந்தன. ‘நந்தன்’ என்கிற தொன்மக் குறியீடும் பலரால் வாசிக்கப்பட்ட மறுவாசிப்பிற்கு உட்படுத்தப்பட்ட ஒரு குறியீடாக அமைவதைக் காணமுடிகிறது. சாதீய கட்டுப்பாடுகளுக்குள் இருந்து தீண்டாமையை அனுபவித்து சாதீய எல்லைகளை சாதீய அமைப்பின் வரையறைகளை எதிர்கொண்ட நந்தன் கதை பலரால் நாடகமாக்கப்பட்டுள்ளது.

திருநாளைப் போவார் என்ற நந்தனார் சரித்திரம் சாதி அமைப்பை மீறாத ஒரு கதையாகப் பார்க்கப்பட்டது. நம்பியாண்டார் நம்பி, கோவிலின் புறத்தே நின்று நந்தனார் இறைவனை வழிபட்டார் என்று பதிவு செய்து, நந்தனாருக்கு ஒரு சமூக மதிப்பை உருவாக்கினார்.

இந்திரா பார்த்தசாரதி நந்தன் கதைக்குத் தான் எழுதியுள்ள முன்னுரையில், "இது நந்தன் கதைதான். நந்தனார் கதை அல்ல. 'ஆர்' என்பது சிறப்பு விகுதி அன்று. சிலுவை. சமூக ஏற்றத் தாழ்வுகளைக் கண்டு சீறிய நந்தன், இந்த 'ஆர்' என்ற சிறப்பு விகுதிக்காக, 'பார்ப்பானுடைய' கைத்தட்டல் பெறுவதற்காக, நெருப்பில் எரிந்து போன சோகக் கதையைச் சொல்லுகிற நாடகம் இது" என்று தன் நாடகத்தின் நோக்கத்தைத் தெரிவித்துள்ளார். இந்திரா பார்த்தசாரதியின் நந்தன் தொடக்கத்தில் சாதியத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பவனாகக் காட்டப்படுகிறான். சாதிய கட்டுக்குள் சிக்கிக்கொண்டிருக்கும் மக்களை வெளிக்கொண்டுவரத் துடிக்கும் மனிதனாகக் காட்டப்படுகிறான். பின்னால் வரக்கூடிய நந்தன் சாதிய பிடிக்குள் தொலைந்து சுயமிழந்து நெருப்பில் இறந்து உயிர்விடும் அவல நிலையையும் பதிவு செய்துள்ளார்.

**சாதியக் குறியீடு :**

சமூகச் சீர்கேடுகளையும், சாதிய ஏற்றத்தாழ்வுகளையும், மனித பலவீனங்களையும், வாழ்க்கை அவலங்களையும், ஆதிக்க அரசியலையும் நந்தன் கதை எடுத்துரைக்கிறது. சாதியத்தைக் குறிக்கும் பல்வேறு குறியீடுகளை நாடகப் பதிவுகளினூடே காணமுடிகிறது. நாடகத்தின் தொடக்கத்தில் 'பறை' சேரி மக்களின் குறியீடாகக் காட்டப்பட்டுள்ளது. "இதுதாங்க எங்க பறச்சேரி. கள்ளே கைலாசம்னு நினைக்கிற பயல்வ" (ப.7) என்ற நந்தனின் கூற்று பறச்சேரியின் அவலநிலையைக் காட்டுகிறது.

பல்வேறு சமூக நிகழ்வுகளின் வழி சாதிய முரண்பாடுகளைப் பதிவுசெய்து சமூக எதார்த்தத்தையும் படம்பிடித்துக் காட்டியுள்ளார். நாடகத்தின் தொடக்கத்தில் அபிராமியை அறிமுகப்படுத்தி அவள் வழி பரதக்கலையை மேல்சாதியினரின் கலையாக அடையாளப்படுத்துகிறார்.

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிழ் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் திருமேனியிற் பால் வெண்ணீரும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" (ப.8) என்ற தேவாரப் பாடலை நந்தன் நினைத்துப் பார்க்கிறான். அபிராமி என்ற பெண் இப்பாடலுக்கு அபிநயம் பிடித்து ஆட அவள் நந்தன் கண்களுக்கு நடராஜராகக் காட்சியளிக்கிறாள். "அளகாயிருக்குது சாமி.... அதைத் திரும்பத் திரும்ப கும்பிட.... பொறவி எதுக்காக? அளகைக் கும்பிட.... பாப்பாரச்சாமி அளகு, பறையன் பார்ப்பானாவது எப்படி? பார்ப்பாரச் சாமியைக் கும்பிடனும்" (ப.9) என்ற நந்தன் கூற்றின் வழி பார்ப்பாரச் சாமியை மேல்சாதிக்கான அடையாளமாக்குவதைக் காணமுடிகிறது.

நந்தன் நடனமாடிய அபிராமியைத் தேடித் திருப்புன்கூருக்குச் செல்கிறான். அங்கவஸ்திரத்தைக் கட்டிக்கொள்கிறான். அந்த ஊருக்குள் செல்ல பறையர்கள் மறுக்கப்பட்டனர். "பறையன் போகக்கூடாது. நாய் போகலாம். நாய் பைரவர். பறையன். நாயைக் காட்டிலும் கேவலம்" (ப. 12) என்ற நந்தனின் கூற்று அக்காலத்தில் நிலவிய சாதிய அடக்குமுறையைக் காட்டுகிறது.

பறையர்கள் நந்தனிடம், "மாடும் பறையனும் ஒன்று" (ப.17) என்று கூறுகின்றனர். நந்தன் "மாடு கோயிலுக்குள் நுழையலாம். பறையனால் முடியாது" (ப.17) என்கிறான். "பறையனைவிட மாடு உயர்ந்தது" (ப. 17) என்று கூறுகிறான். "மாடுகளாக இருக்கோம். மனிசங்களாக மாறணும்" (ப.18) என்று விழிப்புணர்வூட்டுகிறான். "மேல்சாதிக்காரன் சொல்வது பாதி, நாமே அப்படி நினைப்பது

மீதி” (ப.18) என்று கூறித் தன் இனத்தைச் சார்ந்த மக்களை அடிமைத்தளையிலிருந்து விடுவிக்க எண்ணுகிறான்.

நந்தன் கதை நகர்வின் சூழல்களில் பல இடங்களில் பறை - பரதம், நாய் - மாடு போன்ற குறியீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட மக்களுக்கான வாழ்வியல் பிரச்சினைகளை இக்குறியீடுகளின் வழி பதிவு செய்துள்ளார்.

**சாதிய அடக்குமுறையும் மேலாதிக்கமும்**

வேதியர்கள் பலர் நந்தன் கதை நாடகத்தில் பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களுக்குள், “பறச்சாமி வேணாம். பாப்பாரச்சாமி வேணும்” (ப.11), அழுக்குச்சாமி வேணாம் அழகுச்சாமி வேணும், காட்டுச்சாமி வேணாம், நாட்டுச்சாமி வேணும்” (ப.11) என்று நந்தன் கூறுவதைத் தங்களுக்குள் திரும்பக் கூறிக்கொள்கின்றனர். இப்படியே பேச விட்டால் “பறையனுக்கும் வரும் நாட்டாண்மை” (ப.11) என்று உரையாடுகின்றனர். இதன் முடிவாக நந்தனைத் தீர்த்துக்கட்ட வழியைத் தேடுகின்றனர். ஆதிக்கச் சாதியினரின் சாதிய அடக்குமுறையின் உச்சம் இதன்வழி பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒரே சாதியினருக்குள் பிளவு உண்டாகுமாறு மேலாதிக்கச் சிந்தனையுடையோர் திட்டம் தீட்டுகின்றனர். அதன்படி பரதநாட்டியத்திற்கும் பறையர்களின் கூத்திற்கும் இடையே ஒரு போட்டியை ஏற்பாடு செய்து நடத்துகின்றனர். “பறையர்களுக்கு வேணும் புது தர்மம்னு நீ சொல்றது ஒரு வலுவுடைய பறையங்க ஆடற பழங்கூத்தை பரதம் செயித்தான் முடியும்” (ப.36) என்று வேதியர் வற்புறுத்த அதைத் தயக்கத்துடன் நந்தன் ஒப்புக்கொள்கிறான். “இப்போ நடக்கப்போற போட்டி அறிவுக்கும் அறியாமைக்குமிடையே நடக்கப் போற போட்டி... பறையங்க என்னிக்கும் அடிமைகளா காட்டுமிராண்டிகளா இருக்கக் கூடாதுங்கிறதுதான் என் கட்சி...” (ப.37,38). பள்ளர், பறையர், புலையர், உழவர்களின் துன்பகரமான வாழ்க்கை குறிப்புகள் பறையர்களின் ஆற்றலால் கலைவடிவம் பெறுகிறது. ஆனால் அடிமைப்பட்டுக் கிடக்கும் சாதியினரின் கலையும் பண்பாடும் இழிந்தவையாகக் கற்பிக்கப்படுகின்றன. “வெள்ளையுடம்பை விரும்பும் நந்தன்கள் பறையை விட்டுவிட்டுப் பரதத்தைக் கற்றுக்கொள்ளும் போது ‘தலித் தன்னிலை’ காணாமல் போவது சாத்தியம்தானே” (அ.இராமசாமி, ஒத்திகை, ப.42) என்ற இராமசாமி அவர்களின் கூற்று இங்கு சிந்திக்கத்தக்கது. மேலாதிக்கத்தினரின் திட்டப்படி பரதம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படுகிறது.

நாடகத்தின் தொடக்கத்தில் நந்தனை அறிவுப்பூர்வமாகச் சிந்திப்பவனாகக் காட்டிய ஆசிரியர், பிற்பகுதியில் தன் சுயமிழந்து வேதியருக்குக் கட்டுப்பட்டுச் செயல்படுபவனாகக் காட்டுகிறார். அடிமைத்தளையிலிருந்து, சாதிய எல்லைக்குள்ளிலிருந்து தன் மக்களை விடுவிக்க நினைக்கும் நந்தன் அவனது சாதியைச் சேர்ந்த மக்களிடமிருந்தே பிரிக்கப்படுகிறான். தனிமைப்படுத்தப்படுகிறான். சுயமிழந்தவனாய் ஆதிக்கச் சாதியினரின் பிடியில் சிக்கிக்கொள்கிறான்.

ஆதிக்கச் சாதியினர் நந்தனை வன்முறையால் தந்திரமாகத் தீர்த்துக்கட்ட எண்ணுகின்றனர். அவனுடைய ஆசைகளை நிறைவேற்றி, அவனுக்கு இறையருள் கிடைக்கச்செய்து, அவனது சாதியைச் சேர்ந்தோரிடமிருந்தே அவனை அந்நியப்படுத்தி, அவர்களுக்குள் பகைமையை வளர்க்கச் செய்து, இறுதியில் நந்தனைத் தீயினுள் விழச் செய்து எரிக்க வேண்டும் என்று எண்ணுகின்றனர்.

அதன்படி நாடகத்தின் இறுதியில் நந்தன் அபிராமியுடன் சேர்ந்து தில்லைக்குச் செல்கிறான். தீப்புகுகிறான். மனித மிருகமாக மாறி வெப்பம் தாங்க முடியாமல் ஓலமிடுகிறான். ஆதிக்கச் சாதியினர், "இன்னும் பார்ப்பானாப் போகணுங்கிற பறையருங்க யாராரு? வாங்க வாங்க" என்கின்றனர். பறையர்கள் அரங்கை விட்டு ஓடுவதாக நாடகம் நிறைவடைகிறது.

**நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம் கற்பிக்கும் பாடம்**

தன்னைத் தாழ்ந்த சாதி என்று பிறர் கூறுவதை ஏற்றுக்கொண்டு அடிமையாக உழைப்பதும், தன் மக்களை குலதெய்வத்தை ஒதுக்கிவிட்டுப் பெருந்தெய்வத்தை ஏற்று, யாகத்தில் மூழ்கி, தாழ்ந்த சாதி என்னும் கறையைப் போக்கிக் கொண்டு கைலாயம் செல்லும் நந்தனை அயோத்திதாசர் முற்றாக மறுக்கிறார். தாங்கள் யாருக்கும் அடிமை இல்லை என நந்தன் போராடியிருக்க வேண்டும் என்பது அயோத்திதாசரின் எதிர்பார்ப்பு. அந்த வகையில் புதுமைச் சிவம் அவர்களின் 'வீரநந்தன்' நந்தன் கதையின் மாற்று வடிவமாகப் பார்க்கப்படுகிறது.

ஆதிக்கவர்க்கத்தினரின் அரசியல் அடக்குமுறைகளுக்குள் சிக்காமல் போராடத் துணியும் மனதுடன் சுயதுடன் இருக்க நந்தன் கதை அறிவுறுத்துகிறது. சமூகத்தில் இழிநிலையில் நடத்தப்படு மக்கள் விழிப்புணர்வுடன் இணைந்து செயல்பட, சமூக முரண்பாடுகளைக் களைந்து அதற்குத் தீர்வு காணும் வகையில் செயல்படவும் நந்தன் கதை அறிவுறுத்துகிறது. சாதிக் கொடுமைகளுக்கு எதிரான குரலாக நந்தன் கதை பேசப்படும்.

"அந்தச் சேரிக்
கூரை ஓலைகள் படபடக்க
எழும் ஓர் அவலக் குரல்…
நீதியின் நிராகரிப்பில்
நிர்க்கதியாய் மாண்டவர்கள்
மூச்சு மிச்சங்கள்…
கண்ணீர் என்னும்
வெப்ப வளையங்களுக்குள்
சேரி
வெந்து கொண்டிருந்தது". (அந்த நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம், ஈரோடு தமிழன்பன், ப.9, 10) என்ற தமிழன்பனின் கவிதை வரிகள் சமூக நீதிக்கான குரலாக ஒலிக்கிறது.

'பறையருக்கும் இங்குத் தீயர் புலையருக்கும் விடுதலை' என்ற பாரதியின் கவிதை கற்பிக்கும் விடுதலை சாத்தியமாக நந்தன் போன்ற பாத்திரங்கள் இன்னும் உயிர்ப்புடன் பேசப்பட வேண்டும். நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம் அடையாள அரசியலை, சாதிய அடக்குமுறைகளைச் சுட்டெரிக்க வேண்டும்.

**முடிவுரை**

நந்தனார் நெருப்பில் இறங்கி சிவபதம் அடைந்தார் என்னும் பழங்கதையைத் தகர்த்து நந்தனாரை மேல்சாதியினர் எரித்துக் கொன்றனர் என்னும் உண்மையை உரக்கச் சொல்கிறார் ஆசிரியர்.

சாதி பேதமற்ற சமூகநிலை உருவாக நந்தன் கதை அடிப்படையாக வேண்டும். ஆதிக்கச் சாதியினரின் சூழ்ச்சிகளுக்குள் சிக்காது சுயத்துடன் சிந்தித்து ஒற்றுமையுடன் இணைந்து

செயல்பட்டால் ஆதிக்கத்தை வென்றுவிடலாம் என்ற சிந்தனைக்கும் இந்நாடகம் இட்டுச் செல்கிறது.

**துணைநூல் பட்டியல்**

1. இந்திரா பார்த்தசாரதி, ஔரங்கசீப் (நாடகத் தொகுதி) - நந்தன் கதை - தமிழ் புத்தகாலயம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1978.
2. அ.இராமசாமி, ஒத்திகை, ஐந்து கட்டுரைகளும் இரண்டு நாடகங்களும், விடியல் பதிப்பகம், கோயம்புத்தூர், முதறப்பதிப்பு, 1999.
3. கே.ஏ.குணசேகரன், தலித் அரங்கியல், கீழைக்காற்று வெளியீட்டகம், சென்னை முதற்பதிப்பு, 1995.
4. தமிழன்பன், அந்த நந்தனை எரித்த நெருப்பின் மிச்சம், பூம்புகார் வெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1994.
5. மு.இராமசாமி (தொ.ஆ).தமிழில் சோதனை நாடகங்கள், சாகித்திய அகாதெமி, புதுதில்லி,முதல் வெளியீடு, 2001.